இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஸ்ரீ நாரத பௌத்த மத்யஸ்தான விஹார சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, சனவரி மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 10.75 தபாற் செலவு : ரூபா 4.50

## 2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஸ்ரீ நாரத பௌத்த மத்யஸ்த்தான விஹார சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ 29/2002
4568

### ஸ்ரீ நாரத பௌத்த மத்யஸ்த்தான விஹார சங்வர்தன சபாவை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"ஸ்ரீ நாரத பௌத்த மத்யஸ்த்தான விஹார சங்வர்தன சபாவ" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான தாபன மொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட தாபனத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென, இலங்கையில் இதற்கு முன்னர் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் ; முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட தாபனமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப் பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஸ்ரீ நாரத பௌத்த மத்யஸ்த்தான விஹார சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்வர்தன சபாவ" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வாதுவ விவேகாராம சமூக அபிவிருத்தித் தாபனத்தின் தற்போது உறுப்பினர்களாகவுள்ள அல்லது (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள் ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் "ஸ்ரீ நாரத பௌத்த மத்யஸ்த்தான விஹார சங்வர்தன சபாவ" என்னும் பெயரின்கீழும், பெயரின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண் ஸ்ரீ நாரத பௌத்த மத்யஸ்த்தான விஹார சங்வர்தன சபாவவைக் கூட்டிணைத்தல்.

டும் ; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியவாறு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :–

(அ) புத்தசமயத்தின் சகல அம்சங்கள் சம்பந்தப்பட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சிகளுக்கு அனுசரணையளித்தல் ;

(ஆ) பௌத்த மதத்தைப் போதிப்பதற்கெனக் கல்வி நிறுவனங்களை நிறுவுதலும் பராமரித்தலும், பௌத்த தர்மம் மற்றும் அதன் விழுமியங்கள் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டல், அத்துடன் பௌத்த தர்மம் மற்றும் அதன் விழுமியங்களுக்கேற்ப அவர்களின் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுமாறு அவர்களை ஊக்குவித்தலும் ;

(இ) பௌத்த விழாக்கள், சடங்குகள், அனுட்டான முறைகள், மரபுகள் மற்றும் சம்பிரதாயங்களை ஊக்குவிப்பதற்கும் பராமரிப்பதற்கும் பேணிக்காப்பதற்கும் விகாரைகள், பாஞ்சாலைகள், சந்நியாச மடங்கள், ஆசிரமங்கள், ஏனைய சமய நிறுவனங்கள் போன்றவற்றை அமைத்தலும் பராமரித்தலும் ;

(ஈ) சமூகத்திலுள்ள சகல பிரிவினர்களுக்கும் கல்வி வசதிகளையும், சேவைகளையும் வழங்குதலும், புலமைப் பரிசில்கள், பரிசுகள், அத்தாட்சிப்பத்திரங்கள், வேறு அளிப்புகள் போன்றவற்றைப் பெறுவதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்தவர்களுக்கு அத்தகைய அளிப்புகளை வழங்குதலும் ;

(உ) சமயத்தைப் பரப்புவதற்குத் தேவையான பயிற்சியை வழங்குதல் உட்படப் பிக்குமார்களுக்கான பயிற்சியை ஊக்குவித்தலும் ;

(ஊ) சமாதானத்தை ஊக்குவித்தலும், இனங்களிடையே சமூக, இன, மத ஒற்றுமையைப் பேணி வளர்த்தலும் ;

(எ) அநாதைகள், அங்கவீனர், வயோதிபர், நோயாளர், புலம்பெயர்ந்தோர் ஆகியோருக்கு சமூக மற்றும் நலன்புரி சேவைகள் வழங்குதலும் இவர்களின் நலனுக்கும் பயிற்சிக்கும் புனர்வாழ்வுக்கும் மத்திய நிலையங்கள் மற்றும் நிறுவனங்களை நிறுவிப் பராமரித்தலும், மேம்படுத்தலும் ;

(ஏ) நூல்நிலையங்கள், வளங்கள் மற்றும் தகவல் நிலையங்களை நிறுவுதலும் பராமரித்தலும் ;

(ஐ) இளைஞர் யுவதிகளுக்குத் தொழில்நுட்ப அறிவைக் கொடுக்கும் கருத்துடன் ஏதேனும் கைத்தொழிலில் அல்லது தொழிலில் ஈடுபடுதலும், அத்தகைய பொறுப்பு முயற்சிகளில் எவரேனும் ஆள் ஈடுபடுவதற்கு அவருக்கு உதவியளித்து ஆதரவு கொடுப்பதற்கு தொழில்நுட்ப மற்றும் கைத்தொழிற் பொறுப்பு முயற்சிகளை அமைத்தலும், ஏதேனும் அத்தகைய கைத்தொழிலில் அல்லது தொழிலில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டு நடாத்துதலும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்லுமுகமாக கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், வகுப்புகள், விவாதங்கள், மாநாடுகள் என்பவற்றை அல்லது வேறு ஏதேனும் செயற்பாட்டை நடாத்துதல் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள ஏனைய கழகங்கள், ஒழுங்கமைப்புகள் அல்லது சங்கங்களுடன் கூட்டுச் சேர்தல் ; அத்துடன்

(ஔ) மேற்படி குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் எய்துவதற்கு அவசியமான அல்லது உசிதமானவையான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபன அலுவல்களின் முகாமையும் கட்டுப்பாடும் நிருவாகமும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும், அப்போதைக்கான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்களான அத்தகைய எண்ணிக்கையான பணிப்பாளர்களைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் சபையொன்றால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் சங்வர்தன சபாவின் பணிப்பாளர் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையாக அமைதல் வேண்டும் என்பதுடன் கூட்டுத்தாபனத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நடாத்தப்படும்வரை பதவிவகித்தலும் வேண்டும்.

உறுப்பாண்மை இடாப்பு.

5. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்ற ஒவ்வோராளும் அத்துடன் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக அதன்பின்னர் முறையாகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வோராளும் தமது பெயர் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய இடாப்பொன்றைச் சபையானது பேணுவித்தல் வேண்டும்.

(2) இடாப்பானது பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வோர் உறுப்பினரின் பெயரும், முகவரியும், தொழிலும் ;

(ஆ) இடாப்பில் உறுப்பினரின் பெயர் பதியப்பட்ட திகதி ;

(இ) எவரேனும் ஆள் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழியும் திகதி.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

6. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் பின்வருவனவும் அடங்கும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல் அல்லது வேறுவகையாகப் பெறுதல் ;

(ஆ) நிதிகளைத் திரட்டுதலும் காசாகவோ பொருளாகவோ மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் பெறுதல் ;

(இ) கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான அல்லது கூட்டுத் தாபனத்தினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை நிர்மாணித்தல் அல்லது நிர்மாணிக்கச் செய்வித்தல் ;

(ஈ) நாணய மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள், அத்துடன் வேறு கைமாறத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவுசெய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் அத்துடன் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் நடைமுறை, சேமிப்பு மற்றும் வைப்புக்கணக்குகளைத் திறத்தல், இயக்குதல், பேணுதல் மற்றும் மூடுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை சபை பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பாதிக்கும் எவையேனும் சட்டபூர்வமான நம்பிக்கைப்பொறுப்புகளையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற்றலும் ஏற்றுக்கொள்ளலும் நிறைவேற்றலும் புரிதலும் நிருவகித்தலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்தலும், பதவியிலிருந்து நீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும் அத்துடன் கூட்டுத் தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் அவர்களுக்குக் கொடுத்தலும்; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) பின்வரும் எல்லா விடயங்கள் அல்லது அவற்றில் ஏதாவதொரு விடயம் தொடர்பாக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான ஏதேனும் வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரண்படாத விதத்தில் ஏதேனும் பொதுக்கூட்டத்தில், அக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் ஆகக்குறைந்தது மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளின் மூலம் அவ்வப்போது விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கமும், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினரால் கொடுபடற்பாலதான கட்டணங்களும், அவர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும், அவர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது பதவிவிலகலும் ;

(ஆ) சபையின் தெரிவு அல்லது பணிப்பாளர்கள் பதவியைத் துறத்தல் அல்லது அவர்கள் பதவியிலிருந்து அகற்றப்படுதல், அத்துடன் சபையின் தத்துவங்களும் கடமைகளும் சபை நடாத்தப்படும் விதமும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனம், அவர்களைத் தொழிலுக்கமர்த்துதல் அத்துடன் அவர்களைப் பதவிவிலக்குதல், அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் நடத்தை அத்துடன் அவர்களுக்கு ஊதியம் கொடுத்தல் ;

(ஈ) சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடைமுறை, கூட்டங்களைக் கூட்டுதல், கூட்டங்களை நடாத்துதல், வெற்றிடங்களை நிரப்புதல், அத்தகைய கூட்ட அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் ;

(உ) சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தின் நிருவாகமும் முகாமையையும் ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபன அலுவல்களின் முகாமைக்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்,

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள சங்வர்தன சபாவின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று என்றாற் போன்று அதே கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப் படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

8. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன் கூட்டுத்தாபனத்துக் காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, மரண சாதனக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியங்கள் வகையாக இதற்குமுன்னர் அல்லது இதன்பின்னர் பெறப்படும் எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கவேண்டிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தைப் புனரமைப்பதற்காகவும் சீர்திருத்துவதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் பேணுவதற்காகவும் ஏதேனும் பெறுமானத் தேய்வு அல்லது ஒதுக்கு அல்லது கடனாழ் நிதியத்தைக் கூட்டுத்தாபனம் உருவாக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப் படக்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத் திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) எவ்விதமாகவாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் இதனகத்துக்கூறப்பட்ட குறிக்கோள்களை மேம்படுத்துமுகமாகவே மாத்திரம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதன்பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் என்ற வகையில் அல்லது வேறுவகையில் எந்தவிதமாகவாயினும் கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக கொடுக்கப்படுதலோ கைமாற்றப்படுதலோ ஆகாது.

கணக்குகளும் கணக்காய்வும்.

9. (1) சபையானது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்கள் பற்றியும் முறையான கணக்குகள் வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது பரிசீலனை செய்யப்படுதலும் கணக்காய்வுசெய்யப்படுதலும் வேண்டும். என்பதுடன் வருமான செலவினக் கணக்கினதும் ஐந்தொகையினதும் செம்மை கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் ஒருவரான கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது கணக்காய்வாளர்களால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

சங்வர்தன சபாவினால் அல்லது சங்வர்தன சபாவுக்குச் செலுத்தப்படற்பாலனவான தனிசுகள்.

10. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று சங்வர்தன சபாவுக்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும் என்பதுடன், அத்தேதியன்று சங்வர்தன சபாவுக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும், செலுத்தப்படற்பாலனவையான ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

11. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, கொடுத்துமாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை கையேற்கவும் சட்டப்படி ஆற்றல் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப் படுதலும் வேண்டும்.

கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

12. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்தபின்னர், எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்

களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையன வும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவு மான வேறு கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப் படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கழகமானது அல்லது கழகங்களானவை கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.**

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை நிறைவேற்றுப் பணிப்பாளரினதும் பொருளாளரினதும் அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் இருவரும் சமுகமாயிருந்த தற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். இவ்விதம் ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

**உறுப்பினர்களின் பொறுப்பு வரையறை.**

**14.** கூட்டுத்தாபன உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரிடமிருந்து போமதியாகக்கூடிய வாறான அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத்தொகைக்கு மேலாக எவ்வுதவுதொகையையும் செய்வதற்கு ஆளாதல் ஆகாது.

**குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.**

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத் தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

**16.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.